# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆடி 7
ஷஃபா 16
ஞாயிறு (23-7-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 15

விலை சதம் 60


# கூட்டணி மாநாட்டையடுத்து தமிழீழத்தேசியமன்றம் கூட்டப்படவேண்டும்!

## மாவட்ட மந்திரி பதவிகளால் இயக்கம் தடுமாறக்கூடாது பொதுச்சபையில் இளந் தலைவர்கள் போர்க் குரல்!

தமிழர் விடுதலைக்கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மக்களுக்கு கொடுத்த திட்டவட்டமான வாக்குறுதிப்படி, எதிர்வரும் கூட்டணியின் இரண்டாவது தேசியமாநாட்டை யடுத்து தமிழ்ஈழத்தேசிய மன்றத்தை கூட்டுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும், அந்த மன்றத்தைக்கூட்டி அதன்மூலம் தமிழ்ஈழத்தின் அரசியல், பொருளாதார, சமுதாயவிடுதலை காண்பதற்கு திட்டமிட்டு செயலாற்ற வேண்டுமென்றும் வவுனியாவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழ்இளைஞர் பேரவையின் அமைப்பு செயலாளர் மாவைசேனதிராஜா அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினர்.

இதேகூட்டத்தில் பேசிய கவிஞர் காசிஆனந்தன், சாதாரணபொதுமக்கள் பெருவாரியாக பங்குபற்றக்கூடிய பரவலான ஒத்துழையாமை இயக்கங்களை அஹிம்சை அடிப்படையில் கூட்டணி ஆரம்பிக்கவேண்டுமென்றும், மாநாட்டில் இதற்கான தீர்மானம் எடுத்து செயற்படுத்தப்பட வேண்டுமென்றும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.



இவர்கள் இருவரும் உலக இளைஞர் ஒன்றிய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக கியூபாவுக்கு செல்லவிருப்பதால், கூட்டணி மாநாட்டில் எடுக்கப்படவேண்டிய சில முடிவுகள் குறித்து தமது கருத்தை வவுனியா பொதுச்சபைக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னால் வைத்தனர்.

மாவை சேனதிராசா பேசுகையில் கூறியதாவது:-

"பொதுத்தேர்தல் முடிவடைந்து ஓர் ஆண்டுமுடிந்துவிட்டது. பொதுத்தேர்தலின்போது நாம் மக்களின் முன்னால்வைத்த தமிழ்ஈழ இலட்சியத்தைநோக்கி இந்த ஓராண்டுகாலத்தில் எத்தனை அடிகள் முன்னேறியுள்ளோம் என்று நாம் நமது மனச்சாட்சியை தொட்டுக் கேட்கவேண்டும். தமிழ் ஈழ லட்சியத்தை வென்றெடுப்பதற்கு நாம் போதிய அளவு செயற்படவில்லை யென்று தமிழ் இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதை இங்கு சுட்டிக்காட்டவேண்டியது எனது கடமையாகும்.

"சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டில் வாழுகின்ற மனோநிலையுடன் நமது பா. உக்கள் இருக்கக்கூடாது. தமிழ் ஈழத்தின் விடுதலையை மீட்போம், அதற்காக உழைப்போம் என்று சத்திய வாக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தச் சத்தியவாக்கை காப்பாற்றுகிறோமா என்று ஒவ்வொருவரும் தத்தம் மனச்சாட்சியை தொட்டுக் கேட்க வேண்டும்.

"அஹிம்சையடிப்படையில்தான் இயக்கத்தை நடத்துவோம் என்பது கூட்டணியின் கொள்கையாக இருந்தால் அந்த அஹிம்சை அடிப்படையிலாவது தொடர்ச்சியான சட்ட மறுப்பு இயக்கங்களை திட்டமிட்டு நடத்த கூட்டணி தயங்குவதேன்? எதிர்வரும் மாநாட்டில் இதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும், கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளபடி தமிழ் ஈழத்தேசிய மன்றத்தை கூட்டுவதற்கு கோப்பாய் மாநாட்டில் தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டும்"



காசி ஆனந்தன் பேசுகையில் கூறியதாவது!—

"சிங்கள நாட்டில் வாழும் தமிழர்களை தமிழ் ஈழத்தில் வந்து குடியேறும்படி பல ஆண்டுகளாக வேண்டுகோள் விடுத்தோம்; எதுவும் நடைபெறவில்லை. இறுதியில் 1977 இனக்கலவரமே அவர்களை

—8-ம் பக்கம் பார்க்க

## தந்தை செல்வா நினைவுக்கவிதை கட்டுரைப் போட்டி முடிவுகள் உள்ளே

# விளக்கமறியலில் வைக்கப்பட்ட கோப்பிறல் ஜயசேகரா விடுதலை!

## அரசாங்கத்தின் நடவடிக்கை!

மாங்குளம் புகையிரதத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியினல் 21-7-78வரை யாழ் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த கோப்ரல ஜெயசேகரா, உயர் நீதிமன்றத்தில் கட்டளையின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அரசாங்கத்தின் சார்பில் இராணுவத்தளபதியினல் உயர் நீதிமன்றத்துக்கு செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றைத் தொடர்ந்தே கோப்ரல் ஜெயசேகரா விடுதலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

விடுதலை செய்யப்பட்ட ஜெயசேகராவுக்கு பதவி உயர்வும் கிடைக்கலாமென்று பேச்சு அடிபடுகிறது.

மாங்குளத்தில் வைத்து, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற ரயிலில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதும், அதில் பிரயாணம் செய்த தமிழர் ஒருவர் மாண்டதும் நால்வர் காயமுற்றதும் தெரிந்ததே. இச்சம்பவம் தொடர்பான விசாரணையின் பொருட்டே சந்தேக நபரான இலங்கை இராணுவத்தைச்சேர்ந்த கோப்ரல் ஜெயசேகரா விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சென்ற அரசாங்கத்தின் காலத்திலும், செம்மணி பரராசா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக நீதிபதியினல் விளக்க மறியலில் வைக்கப்பட்ட காவல் துறையினர் இருவரும், அரசாங்கத்தினல் விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே.

# துரையப்பா கொலை வழக்கிலிருந்து கலாபதி விடுதலை!

அல்பிரட் துரையப்பா கொலை வழக்கில், கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்த பாலசுப்பிரமணியம் கலாபதி நிரபராதியென அறங் கூறவையினரால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றத்தினல் விடுதலை செய்யப்பட்டார். எனினும் இளைஞர் கலாபதி பத்மநாதன் கொலைச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

துரையப்பா கொலை வழக்கில் கலாபதியின் சார்பில் மூத்த சட்டத்தரணியாக திரு. மு. சிவசிதம்பரம்அவர்கள் ஆஜாராகி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தும், தொகுப்புரையில் தனது சட்டவாதத்தை பிரயோகித்தும், வெற்றியை நோக்கி வழக்கை சிறப்புற நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




வி. விஜயரத்தினம்,
திருநெல்வேலி வடக்கு.

கே: கிழக்கிலங்கையின் 'உதய சூரியன்' தேவா என்று கல்வியமைச்சர், திரு. தேவநாயகம் அவர்களைப் பற்றி கூறியிருக்கிறாரே—உங்கள் கருத்து என்ன?

ப: முன்புகூட்டணியுடன் உறவு கொண்டு உதய சூரியன் கொடியின் கீழ் செயற்பட்ட திரு. தேவநாயகம் அவர்கள் மீண்டும் விரைவில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணையத்தான் போகிறார் என்பதையே கல்வியமைச்சர் இவ்வாறு 'வருமுன்' உரைத்திருக்கிறார் கூட்டணியின் உதய சூரியன் கொடி கூட தேவாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தானே முதன் முதலாக பறக்கவிடப்பட்டது!

ஃ

செல்வி சரோஜினி,
யாழ்ப்பாணம்

கே: பாணும், மாவும் மேலும் மேலும் விலை ஏறுமானால் அதனால் யாருக்கு லாபம்?

ப; அம்'மா'வுக்கு!

கே: யூ.என்.பி. ஆட்சியில் விலைவாசிகள் மளமள வென்று ஏறுவதேன்?

ப; திட்டமிட்ட பொருளாதாரக்கொள்கை எதுவும் யூ. என். பியிடம் இல்லாமலிருப்பது தான். வெளிநாட்டு பொருட்கள் எக்கச்சக்கமாக எவ்வித கட்டுப்பாடுமின்றி இறக்குமதியாகிறது. இதனால் உள்நாட்டு பொருளாதாரம் அதல பாதாளத்துக்கு வீழ்ச்சியடைவதுடன் பண வீக்கமும் ஏற்படுகிறது. சம்பளத்தை கூட்டுவதால் மட்டும் விலைவாசியை சமாளிக்க முடியாது.

ஃ

எம். கந்தசாமி,
யாழ்ப்பாணம்

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய தலைவர் திரு.மு.சிவசிதம்பரம் அவர்களைப்பற்றி சிலவரிகள் கூறுங்கள்.

ப. இனத்தின் ஒற்றுமையைக் கட்டிக்காப்பதற்கு எதையும் இழப்பதற்குத் தயாரான ஒருவரிடம், இயக்கத்தின் பொறுப்புள்ளபதவி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. சிவா தலைவராகவும், அமிர் செயலதிபராகவும் இருப்பது தமிழினத்தின் இறுக்கமான பிணைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு

கே: உண்மையாக நெஞ்சில் கை வைத்துக்கூறுங்கள்-தமிழர் விடுதலைக்கூட்டணி மாநாட்டின் பின்னராவது களத்திலிறங்குமா?

ப: அவர்களாக இறங்காவிட்டாலும், இறங்கியே தீர வேண்டிய ஒரு சூழ்நிலையை காலம் நிச்சயம் தோற்றுவிக்கும். 1982க்குமுன்னர் தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்பது காலத்தின் கட்டாயம்!

ச. தேவச்சந்திரன்,
வாடி வீட்டு வீதி,
கல்முனை

கே: தமிழ்ஈழம் கிடைத்த பின், எமது தலைநகராக எது விளங்கும்?

ப: கடலரணும், இயற்கைத்துறைமுகமும், வரலாற்று பெருமையும், தேவாரப் புகழும் கொண்ட எமது திருகோணமலையே தமிழீழத்தின் தலைநகர் என்பது நான் சொல்லியா நீங்கள்தெரிந்து கொள்ளவேண்டும்

கே: எம்முடன் ஐக்கியப்பட்ட இராசு அண்ணனைப் பற்றி இரண்டுவாக்கியங்கள் கூறுவீர்களா?

ப: பதுங்கிய புலி பாயும்; ஒதுங்கியிருந்த இராசு, தமிழ்ப்பகைவர் மீது இனி ஓங்கிப்பாய்வார் என்று எதிர்பார்ப்போம்!

ஃ

கு. சிவசோதி
அனலைதீவு

கே: பொய் ஒருநாள் மடியும்; நீதிவெல்லும் என்பதற்கு ஓர் உதாரணம் கூறுவீர்களா?

ப: துரையப்பா கொலை வழக்குத் தீர்ப்பு!

ஃ

சந்திரகுமார் பங்கிராஸ்,
அச்சக வீதி,
யாழ்ப்பாணம்

கே: உண்மையைசொல்லுங்கள்—உலகில் அதிக மக்கள் பின்பற்றுவது பௌத்த மதத்தைத்தானே...?

ப: ஒரு திருத்தம் பௌத்த மதத்தை பின்பற்றுபவர்கள் அல்ல; பௌத்த மதத்தை தழுவியிருப்பவர்கள் என்று கேளுங்கள்! அப்படிக் கேட்டால் நீங்கள் சொல்வது கெத்தச்சரி

கே: தமிழக முதல்வரையும் தமிழ் ஈழ முதல்வரையும் பற்றி சிலவரிகள் கூறுங்கள்!

ப: இருவரும் ஓய்வு ஒழிச்சலின்றி உழைப்பவர்கள்; சோம்பல் என்பதை அறியாதவர்கள்; சுறுசுறுப்பு நிறைந்தவர்கள்; தமிழக முதல்வர் ஒரு மாநிலத்தின் முதல்வர்; தமிழ் ஈழ முதல்வரோ ஒரு நாட்டின் பூரண விடுதலைக்காக போராடிக்கொண்டிருப்பவர்!

ஃ

வேல்முருகு,
சுன்னாகம்

கே: 1977 பொதுத்தேர்தல் சமயத்தில் தாம் முழுநேர ஊழியர்களாக இயங்கப்போவதாக சத்தியம் செய்த கூட்டணி பா. உக்களில் எத்தனை பேர் அதன்படி செய்கிறார்கள்?

ப: பெரும்பாலோர் அந்த வாக்குறுதியை அடியோடு மறந்து விட்டார்கள். ஏன் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்த உறுதி மொழிகளையே கூட மறந்துவிட்டார்கள். அவர்களின் மறதி போக்கச் சுதந்திரன் அவற்றை மறுபடியும் பிரசுரிக்கும்.

ஃ

கே- சிறீஸ்காந்தராசா,
குமரகோட்டம்,
கோண்டாவில்

கே: கருணாநிதி தனிநாடு கேட்பதால்எங்களுக்குபலன் கிடைக்குமா?

ப: கருணாநிதி எங்கே தனிநாடு கேட்கிறார். அவர் கேட்பது மாநிலசுயாட்சி அல்லவா?

ஃ

எம். செல்வராசா,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி

கே: குடியரசுத்தலைவரின் தார்மீக ஆட்சிபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஜே. ஆரின் கற்பனையிலும், வாய்ச்சொல்லிலுமே 'தார்மீகம்'நிறைந்து காணப்படுகிறது. அவரது ஆட்சியில், நிர்வாகத்தில் எங்கணும் அப்பட்டமான "பாஸிசமே" கொடிகட்டிப் பறக்கிறது!

ஃ

காந்தன்,
மல்லாவி

கே: தமிழீழம் அமைந்தால், தமிழ் ஈழத்திற்கு கிடைக்க வேண்டிய பகுதிகள் எவைஎவை யென்பதை கூறுவீர்களா?

ப: 1947ம்ஆண்டு வெள்ளையன் இத்தீவை விட்டு வெளியேறிய போது நாம் எந்தெந்தபிரதேசங்களைப்பெற்றிருந்தோமோ, அந்தந்தப் பிரதேசங்கள் எல்லாம், தமிழ் ஈழத்திற்குசேர வேண்டுமென்பது தான் இதிலே ஆகக்குறைந்த பட்சக் கோரிக்கையாக இருக்க முடியும்.

ஃ

ஓர் அன்பன்,
பலாலி

கே: பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இந்தியப் பத்திரிகை இறக்குமதி பற்றி உங்களுக்குப் பின் பேசிய திரு டொமினிக் ஜீவா, அண்ணன், தம்பியாக இருந்தாலும், அண்ணன் வீட்டு ஆடு வந்து தம்பி வீட்டுக்குள் நுழைந்து கண்டு காலிகளைக்கடித்தால்,அதற்கு வேலிபோடுவதில் தவறில்லையென்றும், அதனாலே தான் இந்திய சஞ்சிகைகளுக்கு தடைபோடவேண்டுமென்று தாம் வலியுறுத்துவதாகவும் கூறினாரே— இதற்கு உங்கள் பதில் என்ன?

ப: முதலில் சிங்கள நாட்டுக்கும் தமிழ் ஈழத்துக்கும் வேலிபோட்டு முடிந்தபின், தேவையானால் டொமினிக் ஜீவா கூறும் வேலியைப்பற்றி சிந்திப்போம். முதலாவது வேலி முதலில் போடப்பட வேண்டும்; அதுவரை இரண்டாவது வேலிபற்றிபேசுவது அறிவுடைமையாகாது. இதைத்தான் நான் அக்கூட்டத்தில் வலியுறுத்தினேன்.



# எங்கள் தமிழ் மணி பண்டிதமணி ஐயா!

அடக்கம், அமைதி, அறிவு, தூய்மை, வாய்மை, சால்பு போன்ற உயர்ந்த பண்புகள் அனைத்தும் ஒரு சேர உருவெடுத்துள்ளதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?

நான் கண்டிருக்கிறேன்!

'ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மைக்கு' உதாரணமாக உங்களால் ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியுமா?

என்னால் முடியும்!

தமிழ், சைவம் இரண்டு துறையிலும் ஏதாவது சந்தேகங்கள் எழும்போது தெளிவான தீர்ப்பு வழங்கக்கூடிய முதறிஞர் இவர்தான் என்று தமிழ் ஈழத்தில் உங்களால் யாரையாவது சுட்டிக்கூற முடியுமா?

என்னால் முடியும்!

ஆம் அவர்தான் தமிழ் முனிவராக நம்மிடையே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள்!

அள்ள அள்ளக் குறையாத அறிவுச்சுரங்கமாக—தெள்ளுதமிழ் நீரோடையாக—சிவானுபூதிச் செல்வராக வாழ்ந்து கொண்டிருப்பவர் அவர்!

'நிறைகுடம்' என்பதற்கு இலக்கியம் அவர்!

ஆலமரம்போல விழுதுபரப்பி பலநூறு அறிஞர்களை உருவாக்கித்தந்த பேரறிஞர் அவர்!

தமிழ்மூலம் சைவத்தையும், சைவத்தின்மூலம் தமிழையும் கண்டு, அவற்றிலேயே லயித்து, அவற்றுடன் இரண்டறக் கலந்து கொண்டு வாழ்பவர் அவர்!

''மங்கையொருத்தி தரும் சுகமும் எம்மாத் தமிழுக்கு ஈடாகுமோ'' என்றான் பாரதிதாசன்.

மங்கை சுகத்தை நீத்து, திருமணமே செய்யாமல், பிரமசரியத்தைக் கடைப்பிடித்து தமிழ்ப்பணியாற்றி வருபவர் அவர்!

அவர் எழுதிய நூல்கள் எதிர்காலத்தில் எழுதப்படக் கூடிய ஏராளமான நூல்களுக்கு அடிப்படையாக ஆதாரமாக (authority) விளங்கக்கூடியவை!

அவர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்; கைதேர்ந்த எழுத்தாளர்; தமிழை அவர் கையாளும் அழகே தனி அழகு!

அவர் ஒரு சிறந்த சொற்பொழிவாளர்; தமிழ் அவர் வாயில் நடமிடும் அழகு 'தனிச்சுவையானது'.

அவர் சைவசித்தாந்தத்தில் ஒரு சாயம்!

ஆம், பண்டிதமணி ஐயா அவர்கள் இன்றுள்ள பழைய தலைமுறையின் கடைசி அறிஞர்.

குருகுலக்கல்வியின் மேன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் பண்டிதமணி அவர்கள்.

அவரை நாடி அண்மையில் 'இலக்கிய கலாநிதி' பட்டம் வந்தது!

எத்தனை 'இலக்கிய கலாநிதி'ப்பட்டங்களாலும் அவரது ஆற்றலை அளவிட்டு விட முடியாது!

பட்டங்கள் எல்லாம் அவரது தமிழ்ப்பணியின் முன் வெறும் தூசு!

அத்தகைய அறிஞர் தனது 80வது பிறந்த நாளை அண்மையில் தான் கொண்டாடினார்.

அவர் இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தாம் தேக்கிவைத்துள்ள ஞானத்தையெல்லாம் மக்களுக்கு வாரி வழங்க இறைவன் அருள் வானாக!

அவர் எழுதி அச்சிடப்படாது முடங்கிக்கிடக்கும் நூல்கள் யாவும் விரைந்து வெளிவரச் செய்யவேண்டும்!

இதுவே பண்டிதமணி ஐயாவுக்கு தமிழ்ச் சமுதாயம் செய்கின்ற கைமாறாகும்.

பல்லாண்டு வாழ்க எங்கள் தமிழ்மணி பண்டிதமணி ஐயா அவர்கள்!

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

அன்பு நண்பா

# பாதை தவறாமல் பயணம் தொடரட்டும்!

இதமான காலை இளந்தென்றலின்
சுகானுபவம்,
வளமான வயலோரங்களின் வனப்புமிகு
காட்சிகள்,
நெடிதுயர்ந்து குடைவிரித்து நிழல்தரும்
நீள்தருக்கள்,
அவற்றில் குடியிருந்து கானமிசைத்திடும்
புட்கள்,
கும்மாளமிட்டு நடைபயிலும் கோல
மயில்கள்,
குதித்தோடி விளையாடும் குரங்கினங்களின்
கும்மாளம்,

இயற்கையின் இத்தனை எழிற்கோலங்களையும் ரசித்துச் சுவைத்தபடி நாம் இருந்திட, சுந்தரத் தமிழ் ஈழத்தின் சோற்றுச் சுரங்கங்களாக விளங்கிடும்—கிளிநொச்சி, மாங்குளம் போன்ற பகுதிகளைக் கடந்து தமிழ் ஈழத்தின் எல்லைப்புறப் பிரதேசமாகிய வன்னித் திருநகரை நோக்கி நாம் சென்ற 'ஜீப்' வண்டி பறந்துகொண்டிருந்தது. ஆம், 15-7-78 அதிகாலை நமது விடுதலை இயக்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ் பா. உ. நண்பர் யோகேஸ்வரன் அவர்களுடன் அவருடைய 'ஜீப்'பில் வன்னித்திருநகர் நோக்கிப் பறந்தோம். கூடவே, இயக்கத்தின் ஆரம்பகாலத்தலைவர்களில் ஒருவராகிய திரு. நா. த. செல்லத்துரை, திரு. சேவியர், த. இ. பேரவையைச் சேர்ந்த செந்தில், அவருடன் மற்றோர் இளைஞர், ஆகியோரும் 'ஜீப்' வண்டியில் வந்தனர்.

நண்பா, வன்னித்திருநகருக்குள் நமது 'ஜீப்' வண்டி நுழைந்து, எல்லைக்காவலராம் நமது தா. சிவசிதம்பரத்தின் இல்லத்துக்கு சென்று அவர்தந்த தேநீரை அருந்திவிட்டு, இயக்க அமைப்புக்கான தேர்தல் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இறம்பைக்குளம் மாவித்தியாலயத்தை சென்றடைந்தோம். அங்கு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் என்னை மட்டுமல்ல—அனைவரையுமே வியந்திட வைத்தன.

ஆம், பல்வேறு நாடுகள் கலந்துகொள்ளும் அனைத்துலக கருத்தரங்குகளில், ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் இருப்பிடங்களை சுலபத்தில் கண்டுபிடித்திடவும், கூட்டாக அமர்ந்திடவும், ஒருவர் ஏதாவது பிரச்சினைபற்றி பேசும்போது, பேசுபவர் எந்த நாட்டுப்பிரதிநிதியென்பதை ஏனையோர் சுலபத்தில் அறிந்திடவும், தனித்தனியாக ஒவ்வொரு நாட்டின் பெயரும் குறிக்கப்பட்டு, அந்தந்த நாட்டுப்பிரதிநிதிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்குமே, அதேபோல—அரைவட்ட வடிவத்தில், ஒவ்வொரு தொகுதியின் பெயர்களும் அட்டைகளில் பொறிக்கப்பட்டு தனித் தனிக் குழுக்களாக அவர்கள் அமர்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. அதே சமயம், தெரிவுசெய்யப்படும் இயக்கத்தின் புதிய தலைமைப்பீடத்தினர் அமர்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளிலும் அவரவர்களது பதவிப் பொறுப்புக்களை சுட்டும் அட்டைகள் வைக்கப்பட்டிருந்தன.

மண்டபத்தின் எதிரில், பொதுச்சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தந்தை செல்வா அவர்கள் உற்றுப்பார்த்துக்கொண்டிருப்பதுபோல, தந்தையின் புன்னகை பூத்திடும் உயிரோவியமொன்று மாலை சூட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்த காட்சி உள்ளத்தைப் புல்லரித்திடவைத்தது.

நண்பா, இயக்கத்துக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதில் மற்ற அனைத்துத் தொகுதிகளையும் முறியடித்து இயக்கவரலாற்றிலேயே ஒரு புதிய சாதனையை செய்துகாட்டிய வவுனியாத் தொகுதிக் கூட்டணிக்கிளையினர், இயக்கத் தேர்தலை திட்டமிட்டு, சீராக கட்டுப்பாடாக, ஒழுங்காக எப்படி நடத்துவதென்பதையும் இத்தடவை எடுத்துக் காட்டிவிட்டனர். அவர்கள் செய்திருந்த ஒழுங்குகளையும், ஏற்பாடுகளையும் கண்டு வியந்து அனைவருமே பாராட்டினார்கள்.

நண்பா, கூட்டணிக்கெனப் புதிய யாப்பு தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு அந்த யாப்பின் அடிப்படையில் உறுப்பினர்கள் திரட்டப்பட்டு மூலக்கிளைகளும், தொகுதிக் கிளைகளும் அமைக்கப்பட்டு, பொதுச்சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பொதுச்சபை உறுப்பினர்கள் யாவரும் வவுனியாவில் கூடி, இயக்கத்தின் பொறுப்புக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்; இயக்கத்தின் புதிய மத்திய செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டுவிட்டது.

வவுனியாவில் நடைபெற்ற சிறப்பு பொதுச்சபைக் கூட்டத்துக்கு தலைமைதாங்கிய சாவகச்சேரி பா. உ. அவர்கள் குறிப்பிட்டதைப்போல—தமிழரசுக்கட்சி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பின்பற்றி வந்திருக்கும் ஒரு புதிய முறையை கூட்டணியும் இப்போது பின்பற்ற ஆரம்பித்திருக்கிறது.

மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் இயக்கத்தின் தந்தையாகவும் வழிகாட்டியாகவும் (Leader) மக்களின் தலைவராகவும் விளங்கியபோதிலும், அவர் செயலதிபர், பொருளாளர் போன்ற பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு கட்சித்தலைமைப் பொறுப்புக்கு வேறுபலரை தெரிவுசெய்வதற்கு இடமளித்திருந்ததை நாம் அறிவோம். தமிழரசுக்கட்சியின் நிரந்தர வழிகாட்டியாக தந்தை செல்வா அவர்கள் என்றென்றைக்கும் இருந்து கொண்டிருந்த போதே, கட்சியின் தலைமைப்பதவிக்கு திருவாளர்கள் அமரர் வன்னியசிங்கம், அமரர் இராஜவரோதயம், அமரர் இராசமாணிக்கம், அமரர் நாகநாதன், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதை நாம் மறந்துவிடமுடியாது. "தம்பி வா, தலைமைதாங்கவா" என்று நாவலர் நெடுஞ்செழியனை பேரறிஞர் அண்ணா அழைத்தது போல—தந்தை செல்வா அவர்கள் பல தலைவர்களை உருவாக்கினார்—இயக்கத்தைப் பயிற்சிக் களமாக்கினார்!

அதேபோலத்தான்—தமிழ் இனத்தின் நெஞ்சம் நிறைந்த தலைவராக, நிரந்தர வழிகாட்டியாக (Leader) நாவலர் அமிர்தலிங்கம் அவர்களே திகழ்ந்த போதிலும் — அவராகவே முன்வந்து தாம் செயலதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தலைமைப்பதவிக்கு நல்லூர் சிவாவின் பெயரை முன்மொழிந்திருப்பது — தந்தை செல்வாவின் வழியிலேயே இந்த இயக்கத்தை திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நடத்திச் செல்கிறார் என்பதையும், செல்வா எனும் தெய்வம் வகுத்துச்சென்ற அரசியல் தத்துவங்களின் அடிப்படையிலேயே கூட்டணி இயக்கம் முன்னேறுகிறது என்பதையுமே எடுத்துக்காட்டுகிறது!

புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் நல்லூர் பா.உ: சிவசிதம்பரம் அவர்கள், தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் கட்டிக் காத்திட உறுதியுடன் உழைத்து வருபவர். மலைபோல நின்று நிலைகுலையாது தமிழ்ப் பகைவர்களைச் சாடிவருபவர். அவரது சிம்மக்குரல் கேட்டு எட்டப்பர் கூட்டம் நடு நடுங்குவதுண்டு. தமிழ்காங்கிரசிலிருந்து தமிழினத்துக்குக் கிடைத்த ஒளிமாமணி' சிவா! இவர் தலைமை தமிழ் சமுதாயத்துக்கு கிடைத்திருக்கும் ஒப்பரிய நிழலாகும்!

சிவாவின் தலைமையில் தமிழர் விடுதலைப் போராட்டம் வெற்றிப்படியை நிச்சயம் மிதித்தே தீரும் என்பதற்கு கட்டியம் கூறுவது போல—அநீதியான முறையில் துரையப்பா கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஐவரும் விடுதலை செய்யப்பட்ட சம்பவம் அமைகிறது. நீதிமன்றத்தில் சிவா எழுப்பிய குரல்—தர்மத்தின் குரலாக, உண்மைக்கு திரைபோட்டோரின் இடுப்பொடிக்கும் குரலாக. நியாயத்தின் குரலாக சத்தியக் குரலாக நீதிமன்றத்தில் எழுந்து, இந்த ஐந்து இளைஞர்களுக்கு—கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருந்த அப்பாவி தமிழ் இளைஞன் கலாபதிக்கு— விடுதலை வாங்கித் தந்திருக்கிறது என்றால்—அதே சத்தியக்குரல் இனத்தின் விடுதலைக்கும் வழிவகுக்கும் என்பதை யாரே மறுத்திட வல்லார்?

தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் சிவாவுக்கு கிடைத்த முதல் வெற்றி- கலாபதியின் விடுதலைச் செய்தி. இந்த வெற்றி சிவாவுக்குமட்டுமல்ல- இது தமிழினத்தின் வெற்றி; விடுதலை இயக்கத்தின் வெற்றி; விடுதலை வீரர்களின் வெற்றி; நேர்மையும், உண்மையும் ஒருநாள் வெல்லும் என்பதற்கு துரையப்பா வழக்கில் சிவா ஈட்டியவெற்றி தகுந்ததோர் உதாரணமாகும்.

நண்பா, வவுனியாவில் கூடிய புதிய பொதுச்சபை, இயக்கத்தின் புதிய பொறுப்பாளர்களைத் தெரிவுசெய்துவிட்டது; புதிய செயற்குழுவையும் தெரிவுசெய்துவிட்டது. இந்த நேரத்தில் புதிய பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் செயற்குழுவுக்கும் ஒன்றை நினைவூட்டவேண்டியிருக்கிறது.

இந்நாட்டில், கடந்த இரண்டாண்டு காலத்துக்கிடையில் தமிழ் தேசிய இனத்துக்கு பல்வேறு நெருக்கடிகள், சோதனைகள், வேதனைகள் அடுத்தடுத்து ஏற்பட்ட போதெல்லாம் அவற்றை எதிர்த்து நின்று, தமிழ் இனத்தின் ஒற்றுமையையும் தமிழ் ஈழ விடுதலை இலட்சியத்தையும் உருவாக்கிக் கட்டிக் காத்து வளர்த்துவந்த பெருமை கூட்டணியின் பழைய பொதுச்சபைக்கும், நடவடிக்கைக்குழுவுக்குமே உரியது.

1976ம் ஆண்டு வைகாசித்திங்கள் 14ம் நாள், வட்டுக்கோட்டையில் நடைபெற்ற மாநாட்டின் போதுதான், 'தமிழர் கூட்டணி' 'தமிழர் விடுதலைக் கூட்டணியாக' மலர்ந்தது; சுதந்திர, இறைமையுள்ள மதசார்பற்ற சமதர்மத் தமிழீழ அரசை மீள்வித்து புனரமைப்பதன் மூலம் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்பதே கூட்டணியின் ஒரேயொரு இறுதி இலட்சியம்; முடிந்த முடிபு என்று வட்டுக்கோட்டைப் பிரகடனம் அறுதியிட்டுரைத்தது. வரலாற்றுப் புகழ்பெற்ற இந்த வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை—தமிழ்ஈழ இலட்சியத்தை—கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வளர்த்ததுடன், அந்த இலட்சியத்தையடைவதற்கு பழைய பொதுச்சபையும் நடவடிக்கைக்குழுவும் உறுதி குன்றாமல் செயற்பட்டு வந்திருப்பதைபுதிய பொதுச்சபை உறுப்பினர்கள், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் எந்நேரமும் நினைவில்வைத்துக்கொள்ளவேண்டும்.

சுதந்திரத்தமிழ் ஈழம் என்ற இலட்சிய பூமியை நோக்கி நடைபெறும் புனித யாத்திரையின்போது, தங்குமடங்களை நாடவிடாமல், சலுகைகள் என்னும் குளிர்தரு மரங்களின்கீழ் இளைப்பாறவிடாமல்—இயக்கத்தை இலட்சியம் ஒன்றை நோக்கியே உறுதியுடன் உந்தித்தள்ளிச் சென்ற பெருமையும் பழைய பொதுச்சபைக்கும், நடவடிக்கைக் குழுவுக்குமேயுண்டு.

மூதறிஞர் தந்தை செல்வாவின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் இயங்கிய கூட்டணியின் பழைய பொதுச்சபையும் நடவடிக்கைக் குழுவும், பேச்சு வார்த்தைகள், இடைக்கால ஒப்பந்தங்கள் என்ற மாயமான்களின் பின்னால் இயக்கம் செல்வதை கிஞ்சிற்றும் அனுமதிக்காது சுதந்திரத்தமிழ் ஈழம் என்ற ஒரேயொரு புனித மந்திரத்தையே ஜபித்துக்கொண்டு அது ஒன்றைத்தவிர வேறு எந்த சிந்தனையும் இயக்கத்துக்கு ஏற்படாதவாறு கண்ணும் கருத்துமாக விடுதலைப்பாதையொன்றிலேயே இயக்கத்தை வழிநடத்தி வந்திருக்கிறது. பிரிவினைத்தடைச்சட்டங்கள் உடைத்தெறியப்பட்டு தமிழ் ஈழ இலட்சியம் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது;

அதுமட்டுமல்ல — 1977 ஆடிப் பொதுத்தேர்தலில் 'சுதந்திரத்தமிழ் ஈழம்' என்ற தூய்மையான விடுதலை இலட்சியத்தை தமிழ் மக்கள் முன்னால் வைத்து, 'தமிழ் ஈழம்' என்ற இலட்சிய உணர்வினால் தமிழ் மக்களை ஒன்று திரட்டி—தமிழ்ஈழ அரசு ஒன்றைத்தவிர, வேறு எந்த வித சலுகைகளிலும் கூட்டணி தன் உள்ளத்தைப் பறிகொடுக்க முடியாதவாறு, தெளிவான திட்டவட்டமான தீர்க்கமான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொடுத்த பெருமையும் பழைய பொதுச்சபைக்கும் நடவடிக்கைக் குழுவுக்குமேயுண்டு.

ஆம் — 'தமிழ் ஈழம்' என்ற மகோன்னதமான புனித இலட்சியத்தை உருவாக்கி, தமிழ் மக்களின் தியாகம், ஒற்றுமை, விடுதலை உணர்வு ஆகியவற்றினால் அதைக்கட்டி வளர்த்து, அந்த விடுதலைப்பாதையொன்றைத்தவிர வேறு திசைகளுக்கு இயக்கம் அணுவளவும் திரும்பி விடமுடியாதபடி 'தமிழ் மக்களின் ஆணை' யெனும் கடிவாளம் பூட்டி, இயக்கத்தைத்தொடர்ந்து விடுதலைப்பாதையில் நடத்திச் செல்லும் பொறுப்பை புதிய பொதுச்சபை, செயற்குழுவிடம் ஒப்படைத்திருக்கிறது கூட்டணியின் பழையநடவடிக்கைக்குழுவும், பொதுச்சபையும்.

எதிர்வரும் கோப்பாய் மாநாட்டிலிருந்து—பாதை மாறாமல்—பயணம் தவறாமல் — இயக்கம் சலுகைகளிலும் தங்குமடங்களிலும் மயங்கித் தியங்கி நின்றுவிடாதபடி அதைத் தந்தை செல்வா காட்டிய 'சுதந்திரத் தமிழ் ஈழம்' எனும் இலட்சிய புரியை நோக்கி புதிய பொதுச்சபை செயற்குழு உறுப்பினர்கள் இயக்கத்தை வழிநடத்துவார்கள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம்.

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# நீதி வென்றது!

அல்பிரட் துரையப்பா கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்த ஐந்து தமிழ் இளைஞர்களையும் அறங்கூறவையினரின் ஒரே மனதான தீர்ப்பின்படி கொழும்பு மேல் நீதிமன்றம் விடுதலை செய்து விட்டது.

துரையப்பாவை கொலை செய்யச் சதி செய்ததாகக் கிருபாகரன், சந்ததியார், லோகநாதன், ஸ்ரீதரன் ஆகிய இளைஞர்கள் மீதும், துரையப்பாவை கொலை செய்ததாக கலாபதி என்ற இளைஞன் மீதும் குற்றப் பத்திரிகை சுமத்தப்பட்டு வழக்கு நடைபெற்றது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் ஐந்து பேரும் விசாரணையின் பின் நீதிமன்றத்தினால் இப்போது விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

நீதியும் நேர்மையும், நியாயமும் ஒருநாள் வெற்றி பெற்றே தீரும்; அதர்மத்தை தர்மம் ஒரு நாள் முறியடித்தே தீரும்; அசத்தியத்தை சத்தியம் வென்றே தீரும் என்பதற்கு துரையப்பா வழக்கில் நீதிக்குக்கிடைத்த ஈடிணையற்ற வெற்றி தகுந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தன்மான உணர்வும், தமிழினப்பற்றும், தமிழீழ விடுதலை வேட்கையும் நிறைந்த தமிழ் இளைஞர்கள் மீது இவ்வாறான வீணான பழிகளைச்சுமத்தி. பொய்க்குற்றச் சாட்டுக்களை இட்டுக்கட்டி, அவர்களைச் சிறைக்குள் தள்ளவும் பயங்கரமான தண்டனைகளை அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கவும் முந்திய அரசாங்கத்தின் காலத்தில் பொலிசார் திட்டமிட்டு "பாஸிஸ" வழிகளில் இறங்கினர்! இதற்காக பல சோடனைகளையும் கற்பனைகளையும் உருவாக்கி, அவற்றை நிரூபிப்பதற்கு பல பொய்ச்சாட்சியங்களையும் தயார் செய்தனர்.

ஆயினும், உண்மையையும், நியாயத்தையும் சிலகாலத்துக்குத் தான மறைத்து வைக்க முடியும்; நீண்டகாலத்துக்கு பொய்மையால் தாக்குப்பிடிக்க முடியாது; இறுதியில் சத்தியம் தான் வெல்லும் என்பதை நீதிமன்றத்தீர்ப்பு அறுதி உறுதியாகவும், ஆணித்தரமாகவும் துலாம்பரமாகவும் சுட்டிக்காட்டி விட்டது.

நீதி தேவனிடமிருந்து நிரபராதி என்ற இந்தத் தீர்ப்பை பெறுவதற்கு முன்னால், பொலிசார் கைகளில் சிக்கிய இந்த இளைஞர்கள் பல மாதங்களாகப்பட்ட துன்பங்களும, அனுபவித்த பயங்கரமான சித்திரவதைகளும், சொல்லுந்தரமன்று; நிரபராதிகள் என்று நீதிமன்றத்தினால் இன்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலைசெய்யப்பட்ட இந்த அப்பாவி இளைஞர்கள், பொலிஸ் விசாரணையிலிருந்தபோது பல மாதங்களாக அனுபவித்த பயங்கரக் கொடுமைகளுக்கு யார் பதில் சொல்வது? இந்த அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு அவர்களது வாழ்க்கையும், படிப்பும், எதிர்காலமும் பாழடிக்கப்பட்டதற்கு முந்திய அரசும் பொலிசாரும் தான் பதில் சொல்ல வேண்டும்!

எனினும், மனம்தளராமல் சோர்ந்து விடாமல். துன்பங்களையும் சித்திரவதைகளையும் தாங்கிக்கொண்டு, பொறுமையுடன் காத்திருந்து, இறுதியில் சத்தியப் போராட்டத்தில் வெற்றியீட்டி, விடுதலைப்பறவைகளாக வெளிவந்து விட்ட இளைஞர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

இனவிடுதலை, சுதந்திரம் கோரிப்போராடும் தமிழ்இளைஞர்கள் மீது இவ்வாறான பொய்வழக்குகளைப் போட்டுப் பயமுறுத்தி, அவர்களை அடக்கிவிட முடியாதென்பதைமுந்திய அரசு உணரத் தவறிவிட்டது; இன்றைய அரசாவது இதை உணரவேண்டும்.

இன்றும் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள்மீதுநீதி மன்றத்தில் விசாரணை நடைபெறுமானால், இவர்களில் பலர் நிரபராதிகள், அப்பாவிகள், என்பதை நிலைநாட்டுவதற்கு தயாராக எத்தனையோ தமிழ்ச்சட்டத்தரணிகள் காத்திருக்கிறார்கள்.

துரையப்பா கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சார்பாக மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி, அவர்கள் சார்பில் நீதிநியாயத்துக்காக வாதாடி, பொய்ச்சாட்சியங்களை புட்டுக்காட்டி; பொலிசார் போட்ட பொய் வழக்கை உடைத்தெறிந்து, உண்மையை நிலைநாட்ட இரவு பகலாக உழைத்த சட்டத்தரணிகள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

அமரர் ஜி.ஜி திருச்செல்வம், தந்தைசெல்வா போன்ற மாபெரும் சட்டமேதைகளின் மறைவினால், தமிழர்கள் புகழ்க்கொடி நாட்டிய சட்டத்துறையில் இடைவெளி ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சியோர்பலர், ஆனாலும் துரையப்பா வழக்கில் கிடைத்த வெற்றி, சட்டத்துறையில் தமிழன் வகிக்கும் உயர்ந்த இடம் அழிந்துவிடவில்லையென்பதை நிருபித்துவிட்டது.

துரையப்பா கொலை வழக்கில் தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டது நியாயத்தின் வெற்றி; சட்டத்துறையிலும் தமிழனைத் தோற்கடிக்க முடியாது என்பதை எடுத்துக்காட்டி விட்ட நீதியின் வெற்றி; சத்தியம் ஒரு நாள்வென்றே தீரும் என்பதற்கு இது தகுந்ததோர் எடுத்துக் காட்டு.

# 55 அகவை காணும் தலைவர் சிவா இன்னும் பல்லாண்டு வாழ்க!



தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் நல்லூர் சிவாவின் 55வது பிறந்த தினத்தையொட்டி அவர் தேகசுகத்துடன் நீடூழி வாழ்ந்து பொதுவாக இலங்கை மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ் மக்களுக்கும் தனது அளப்பரிய சேவையைத் தொடர்ந்து செய்வதற்கு எங்கள் சிவாவுக்கு நல்ல சுகத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுக்கும் வண்ணம் பரம்பொருளாகிய சிவனை வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துரைகளையும் வழங்குகின்றேன்.

இவர் கரவெட்டியிற் சைவமும், தமிழும் மணம் கமழும் பரம்பரை மணியகாரர்களாகிய சிற்றம்பலம், பொன்னையா ஆகியோரின் குடும்பத்தில் 20. 07. 1923ம் திகதி, சேர். பி: இராமநாதன் அவர்களின் சேவையைத் தொடர்வதற்கெனச் சொல்லி வைத்தாங்கு திரு. முருகேசு உடையார் அவர்களுக்கும், திருமதி சிவபாக்கியம் அவர்களுக்கும் அருந்தவப் புதல்வனாக உதித்தார்.

இவர் 'வளரும் பயிரை முளையிற் தெரியும்' என்னும் பெரியோர் வாக்கிற்கு அமையத் தனது சிறுபிராயத்திலேயே தமிழ்ப்பற்று, சைவப் பற்று உடையவராய்த் தோற்றமளித்தார். ஆரம்பக் கல்வியைக் கரவெட்டியிலுள்ள விக்னேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்துப் பின் கொழும்பு மாநகரிலுள்ள 'றோயல்' கல்லூரியில் மேற்படிப்பை முடித்துஇலங்கைச் சர்வகலாசாலையில் பீ. ஏ, பட்டமும் பெற்றுச் சட்டக் கல்லூரியிற் சட்டம் பயின்று, முடிவிற் சிறந்த சட்டத்தரணியாகத் தனது தொழிலைக் கொழும்புமாநகரில் மேற்கொண்டு பல சட்ட நுணுக்கங்களும், சட்டப் பிரச்சனைகளும் உள்ள மிகச் சிக்கலான வழக்குகளில் ஏற்பட்டு வெற்றியீட்டினார்.


இவர் பொதுவுடமைக் கொள்கையிற் சிறுவயதிலிருந்தே கண்ணோட்ட முள்ளவராக இருந்து 1960ம் ஆண்டில் அரசியலிற் குதித்து, உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினராக அகில இலங்கைத் தமிழ்த் காங்கிரஸ் கட்சி மூலம் தெரிவு செய்யப்பட்டார். பின் 1965ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றியீட்டினார். பாராளுமன்றக் குழுவின் உதவித் தலைவராகவும், உதவிச் சபாநாயகராகவும் சிறப்புறக் கடமையாற்றிப் பாராளுமன்ற உறுப்பினர்களதும், பொதுமக்களினதும் மதிப்பையும், பாராட்டுக்களையும் அத்துடன் கீர்த்தியையும் பெற்றார்.

1972ம் ஆண்டு தமிழர் கூட்டணியை உருவாக்கிய முக்கிய தலைவர்களில் இவரும் ஒருவராவார். தற்பொழுது நல்லூர்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகவும், எதிர்க்கட்சி உப தலைவராகவும், கூட்டணியின் செயல் அதிபர்களில் ஒருவராகவும், சற்றிற் கூட்டணியின் ஏகோபித்த தலைவராகவும் வந்தமை அவரின் சிறந்தசேவையையும், திடம் வாய்ந்த தன்னம்பிக்கையையும், தமிழ் மக்களின் நன்னம்பிக்கையையும், அபிலாசைகளையும் பெற்ற இவர் எல்லாம் வல்ல இறைவனின் அருளுடன் தனது அளப்பரிய சேவையைத் தொடர்ந்தும் செயலாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

—கமுருகரெத்தினம் (ச.நீ)
கந்தர்மடம்,

# பனம் பொருட்களுக்கு வெளிநாடுகளில் பெரும் வரவேற்பு

## த. வி. கூ. பொருளாதாரத்துறை செயலாளர் துரைரத்தினம்தகவல்!



தமிழ் ஈழத்தின் கற்பக தருவான பனையை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும்பொருட்களுக்கு வெளிநாடுகளில் பெரும்வரவேற்பு இருந்து வருவதாகவும், மேசைத் தடுக்கு (TABLE MAT)கோரி பத்து இலட்ச ரூபாபெறுமதியான ஓடர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாதாரத் துறைச்செயலாளர் திரு. க. துரைரத்தினம் பா. உ. சுதந்திரனுக்குத் தெரிவித்தார்.

பனம் பொருள்களைக் கொண்டு அழகியபாவனைப் பொருட்கள் பலவற்றை இங்கிருந்து தயாரித்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்வதில் த. வி. கூ. பொருளாதாரத்துறைச் செயலாளர் திரு. க. துரைரத்தினம், உடுப்பிட்டி பா. உ, த.இராசலிங்கம், மன்னார் பா. உ.திரு. சூசைதாசன், பனம்பொருளாராய்ச்சி நிலையத்தலைவர் திரு. கே. வி. நித்தியானந்தா, அமரர் டாக்டர் நாகநாதனுடைய மகன் இலங்கை திரு. [illegible] திரகாசன் ஆகியோரைக் கொண்ட குழு இப்போது ஈடுபட்டுள்ளது.

அதே சமயம், பனம் பொருள் கூட்டுறவுச் சங்கமும் திரு.நடராசா தலைமையில் இத்துறையில் பலநடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பனங்குருத்தினால், அழகிய முறையில் தயாரிக்கப்படும் TABLE MAT (சாப்பாட்டு மேசையில் போடப்படும் தடுக்கு) இப்போது வெளிநாட்டாரைக் கவர்ந்துவருகிறது. இந்த "டேபிள் மாற்" கோரி ஒரு மில்லியன் ரூபாவுக்கு இப்போது வெளிநாடுகளிலிருந்து ஆடர் கிடைத்துள்ளதாம்.

எனவே இத்தகைய மேசைத் தடுக்குகளை(TABLE MAT) தயாரிக்கக்கூடியவர்கள் இப்போது தேவைப்படுகின்றனர். தனித்தனியாகவோ, அல்லது குழுவாகவோ அவர்கள் இதிலே ஈடுபடலாம். இத்துறையில் பயிற்சிபெற விரும்புவோரும் விரும்பிவரவேற்கப்படுகின்றனர்.

மேசைத்தடுக்குத் தயாரிக்கக் கூடியவர்களும், அல்லது அதிலே பயிற்சிபெற விரும்புபவர்களும், த.வி.கூ. பொருளாதாரத்துறைச் செயலாளர் திரு. க. துரைரத்தினம் அவர்களுடனோ, அல்லது அக்குழுவில் இடம் பெற்றுள்ள வேறுயாருடனுமோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வாராந்தக் கருத்தரங்கு

இடம்: த.வி.கூ. தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம்;

காலம்:- 22-7-78 சனிக்கிழமை மாலை 6.30மணி;

தலைவர்:- திரு: வெ, யோகேஸ்வரன் பா: உ;

தலைப்பு. 'தமிழ்ஈழம் மீட்கத் தலையும் தருவான் தமிழ்த் தேசியவாதி"

உரை திரு.மு. ஆலாலசுந்தரம் (சட்டத்தரணி) திரு. எஸ். திருநாவுக்கரசு (சட்டத்தரணி),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக்கலவரத்தின் ஓராண்டு பூர்த்திநினைவாக

# சன்சோனி ஆணைக்குழு சாட்சிய விபரங்கள்

# ஆங்கிலத்தில் வெளியிடப்படுகின்றன!

சன்சோனி ஆணைக்குழுவின் முன் அளிக்கவிருக்கும் சாட்சியங்களும், இறுதியில் ஆணையாளர் சன்சோனி அளிக்கப்படும் தீர்ப்புரையும் நிரந்தர ஆவணமாகப் பாதுகாத்து வைக்கப்படக் கூடிய வகையில் அதிகார பூர்வமாக (AUTORITY) வெளிவருமா என்றுதமிழன்பர்கள் ஏராளமானோர் அங்கலாய்ப்புடன் கேட்டு வந்தார்கள்.

இந்த நாட்டில் இரண்டு தேசிய இனங்களும்இணைந்து வாழ முடியாதென்பதற்கும், தமிழ் ஈழமும், சிங்கள சிறீலங்காவும் பிரிந்தே வாழ வேண்டுமென்பதற்கும் தெளிவான ஓர் எடுத்துக் காட்டே ஆவணி 1977 கலவரமாகும். சிங்கள சிறீலங்காவில் நடைபெற்ற மிலேச்சத்தனமான இனக்கொலை பற்றிய விபரங்கள் எல்லாம் சன்சோனி ஆணைக்குழு முன் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை காலாதி காலத்துக்கு தமிழ் மக்களால் மறக்க முடியாதவையாகும்.

சன்சோனி ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்படும் விபரங்களையெல்லாம் அச்சிட்டு யாராவது இலங்கையில் வெளியிட்டுள்ளார்களா? அப்படியானால் அவற்றை அனுப்புங்கள், என்ன விலையானாலும் வாங்குகிறோம் என்று வெளிநாட்டிலிருந்து பலர் ஆர்வத்தோடு எழுதுகிறார்கள்.

சன்சோனி ஆணைக்குழு சாட்சிய விபரங்களை தமிழில் திரு க. சச்சிதானந்தன் வெளியிட்டு வருகிறார். இதுவரை மூன்று வெளியீடுகள் வந்து விட்டன.

ஆணைக்குழு சாட்சிய விபரங்களை அப்படியே ஆங்கிலத்தில் முழுமையாக அச்சிட்டு வாரா வாரம் வழங்குவதற்கு கொழும்பிலுள்ள சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனம் இப்போது முன் வந்துள்ளது.

சுதந்திரன் பத்திரிகை அளவுக்கு எட்டுப் பக்கங்களில், எதிர்வரும் ஆவணியிலிருந்து—அதாவது கலவரம் நடந்து ஓராண்டு முடிகிற சமயத்தில்— வாரந்தோறும் வெளிவரவிருக்கிறது சன்சோனி ஆணைக்குழு விபரங்கள்.

சகல வெளியீடுகளையும் வாங்கி வைத்துப் பின்னர் 'பைண்ட்' செய்து வைத்துக் கொள்ளக் கூடிய முறையில் வெளிவரவிருக்கும் இந்த ஆங்கில வார வெளியீடு தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும்.

சன்சோனி ஆணைக்குழு விபரங்களின் ஆங்கில வெளியீடொன்றின் விலை ரூபா ஒன்றுமட்டுமே.

வெளிவரும் நாளை விரைவில் எதிர்பாருங்கள், வேண்டுவோர், சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் 194ஏ, பண்டாரநாயக வீதி, கொழும்பு எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

## தந்தை சமாதிக்கு அஞ்சலிசெலுத்தி மாநாடு தொடங்கும்

கோப்பாய் தொகுதியில் கூடவுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டை ஆரம்பித்து வைப்பதன் முன் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் தமிழ் ஈழத்தின் தேசபிதா முதறிஞர் செல்வாவின் நினைவுத்தூபிக்கு அஞ்சலி செலுத்திவிட்டே மோட்டார் பவனியாகமாநாட்டுப் பந்தலை நோக்கிப் புறப்படுவார்கள் என அறியப்படுகிறது.

தேசிய மாநாட்டுக்கு மோட்டார் பவனியாகப் புறப்பட்டுச் செல்லவிருக்கும் மோட்டார் வண்டிகளில் முன் ஒட்டப்படுவதற்கான தமிழ் ஈழத்தேசப் படங்கள் லண்டனிலிருந்து கிடைக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (car stickers)

வெளிநாடுகளில் வதியும் மோட்டார் சொந்தக்காரர்களான தமிழர்கள் மேற்படி தமிழ் ஈழத் தேசப்படங்களை தமது மோட்டார் வண்டிகளில் ஒட்டியபடி உலகத் தலைநகரங்களை வலம் வருவது சுதந்திரன் வாசகர் அறிந்ததே!

## தமிழீழ எழுச்சிப் பாடல்கள் தேவை

கோப்பாய்த் தொகுதியில் இடம் பெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டிலும், விளம்பர வாகனங்களிலும் தமிழ் ஈழ எழுச்சிப் பாடல்கள் தமது குரல்களில் ஒலிபரப்பப்பட விரும்புவோர் பக்கவாத்தியங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்களை வரவேற்புக் குழுச் செயலாளர், இரண்டாவது தேசிய மாநாடு, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆவரங்கால், புத்தூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி வேண்டப்படுகின்றனர்.

—6ம் பக்கத் தொடர்

விதைகள் வெளிநாட்டில் இருந்து கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர் அங்கிருந்து மலை நாட்டிற்குக் கொண்டு சென்ற பின்னரே இங்கு அனுப்பி வைக்கப்படுகிறது. வெளிநாட்டு விதைவகைகள் மட்டுமல்ல உள் நாட்டு யாழ்ப்பாணத்து காய்கறிகள் கூட இங்கிருந்து பெல் விகாரை சென்று பாதுகாப்பு நிலையத்தில் வைக்கப்பட்டே அனுப்பப் படுகின்றது. இங்கிருந்து உயர்ந்த சிறந்த விதைகள் அங்கு போய் உதவாத முளை திறனற்ற விதைகள் இங்கு அனுப்பி வைக்கப்படுவது வழமை,

### இந் நிலை ஏன்?

வட பகுதியில் ஏன் ஒரு விதை உருளைக்கிழங்கு பாதுகாப்பு நிலையம் ஆரம்பிக்கக் கூடாது? இந் நிலையம் ஆரம்பிக்கும்படி கேட்டும் நடைபெற வில்லை அது ஏன்?

### விவசாய டிப்புளோமா பயிற்சி நிலயம் எங்கே?

குண்டசாலையில் கற்றுக் கொண்டிருந்த தமிழ் வாலிபர்கள் கலவரத்தின் போது சிங்களக் காடையரால் தாக்கப் பட்டார்கள், உடைமைகள் பறிக்கப்பட்டன ஆரம்ப காலம் தொட்டு ஒரு முறையல்ல, இரு முறையல்ல பல முறை அங்கு தமிழ் மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். எடுத்த நடவடிக்கை என்ன? தமிழ்ப்பகுதியில் ஒரு டிப்புளோமாப் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்கும்படி— மாணவர்களும், கல்விமான்களும், அரசியல் தலைவர்களும் விவசாய அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தும் பிடிவாதமாக மறுக்கப்பட்டது ஏன்? தமிழ் மாணவர்கள் சிங்களக் காடையரால் தொடர்ந்துவளர்த்த கடாக்கள் போல் வெட்டப்பட வேண்டுமென்பதா.

### இயந்திரவியல் பயிற்சி நிலையம் எங்கே?

அனுராதபுரத்தில் மேற்கு யேர்மன் உதவியுடன் இயங்கும் நவீனவிவசாயஇயந்திரவியல் பயிற்சி நிலையத்தில் பயின்ற பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்கள் தாக்கப் பட்டார்கள், தமிழ்ப் பொறியியலாளர்கள் தாக்கப்பட்டார்கள், சொத்துக்கள் சூறையாடப்பட்டன. விவசாய அமைச்சர் எடுத்த நடவடிக்கை என்ன? அப்பயிற்சி நிலையத்தைப் போன்ற ஒரு பயிற்சி நிலையத்தை ஏன் தமிழ்ப் பகுதியில் அமைக்க முடியாது?

இவைதான் போகட்டும்—

### யாழ்ப்பாணத்தில் இயங்கிய திரைப்படப் பிரிவு எங்கே?

வவுனியாவின் மேற்கு யேர்மனின் உதவியுடன் இயங்கி வந்த படக்காட்சி வாகனம் இங்கே சிலவருடங்களாக இயங்காதிருப்பதேன்? யாழ் மாவட்டத்திலும் அதே போல் திரைப் படப் பிரிவுக்கு மூடு விழா நடத்தியிருப்பதேன்? திரைப் படத்தின் மூலம் யாழ்ப்பாணத்து மக்கள் அதிகமான விவசாய அறிவை இன்னும் பெற்று விடுவார்கள் என்ற காரணமா?

இளம்விவசாயிகள் கழகங்களின் வட்டாரப் போட்டிகள் பூர்த்தியாவதற்கு மாவட்டப்போட்டி வைத்து அமைச்சரை வரவேற்றுப் பந்தம் பிடிப்பது எந்த அதிகாரியின் பதவிஉயர்வுக்காக எனக் கேட்கின்றோம்?

அமைச்சரின் வருகையைப் பகிஷ்கரிப்போம்!

கறுப்புக் கொடிகளால் எதிர்பைக் காட்டுவோம்!

இளம்விவசாயிகள் கழகங்கள் விழாக்களை பகிஷ்கரிக்கட்டும்! அமைச்சர்வடபகுதி [illegible] வாபஸ் பெறட்டும்.

## தந்தை செல்வா நினைவு
## கட்டுரை கவிதைப் போட்டி
## வெற்றிபெற்றோர் விபரம்

லண்டன் ஈழ விடுதலை முன்னணியின் ஆதரவுடன் சுதந்திரன் நடாத்திய தந்தை செல்வா நினைவு கட்டுரை, கவிதைப் போட்டிகளில் முதல் மூன்று பரிசுகளையும் பெறுவோரது விபரம் வருமாறு:

### கட்டுரைப் போட்டி

முதல் பரிசு ரூபா. 150.00 பெறுபவர்
ஆ. நடராசா,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

கட்டுரைத் தலைப்பு: "இலங்கை அரசியலில் செல்வா ஏற்படுத்திய தாக்கங்கள்"

இரண்டாம் பரிசு ரூபா. 100 00 பெறுபவர்:
செல்வி பொன்னரசி இராச முத்தையா.
104, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

கட்டுரைத்தலைப்பு: "இலங்கை அரசியலில் செல்வா ஏற்படுத்திய தாக்கங்கள்"

மூன்றாம் பரிசு ரூபா. 50.00 பெறுபவர்:
ச, சக்திதாசன் (அக்கரைச் சக்தி)
அக்கரைப்பற்று.

கட்டுரைத் தலைப்பு: "செல்வா ஒரு சகாப்தம்"

### கவிதைப் போட்டி

முதல்பரிசு ரூபா 100-00 பின்வரும் இருவருக்கும் தலா ரூபா. 50 வீதம் சமமாகப் பங்கிடப்படுகிறது.

(1) தாமரைத்தீவான்,
ஈச்சந்தீவு. கிண்ணியா.

(2) ம. விக்ரர்,
67, வேம்படி வீதி. யாழ்ப்பாணம்,

இரண்டாவது பரிசு ரூபா 50-00 பின்வரும் இருவருக்குமிடையே தலா ரூபா 25 வீதம் சமமாகப்பங்கிடப்படுகிறது.

(1) பாண்டியூரன்,
பாண்டிருப்பு—1. கல்முனை.

(2) தென்புலோலி வீ,பரந்தாமன்.
தென்புலோலி, பருத்தித்துறை.

மூன்றுவது பரிசு ரூபா 50-00 பின்வரும் இருவருக்கும் தலா ரூபா 25 வீதம் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது

(1) சா. சக்திதாசன்,
தாமோதர விலாசம்
அக்கரைப்பற்று—7.

(2) செ. குணரத்தினம்,
3ம் குறுக்குத்தெரு, அமிர்தகழி,
மட்டக்களப்பு.

போட்டியில் வெற்றி பெற்றோருக்குரிய பரிசுகள் ஆவரங்காலில் 29, 30ல் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டின் இலக்கிய அரங்கில் வைத்து கூட்டணி செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்களினால் கையளிக்கப்படும்.

மாநாட்டில் நேரடியாக கலந்து கொண்டு பரிசுபெற முடியாதவர்கள். அதை நமக்கு அறிவித்தால், பரிசுத் தொகை அவர்களுக்குநேரடியாக அனுப்பிவைக்கப்படும்;

போட்டியில் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் நடுவர்களாகப்பணியாற்றியோருக்கும் எமது நன்றி. பரிசு பெற்றோருக்கு எமது பாராட்டுதல்கள்.

—ஆசிரியர்
சுதந்திரன்




இக்கன சலவைக்கு மில்க்வைற் பார் சோப் வாங்கி உபயோகியுங்கள். பெரிய பார் சோப்பாகவும்; சிறிய பார் சோப்பாகவும் விற்பனையாகின்றது. 10 மேலுறைகளை அனுப்பி அழகிய பொலித்தீன் பாக்கை அல்லது 2 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி அல்லது வெளியீடுகளில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தமிழ் இராச்சியம் இருந்ததில்லையென வரலாறு திரித்த அமைச்சர் வருகின்ருர்! வரவேற்கத் திரளுமா வகையற்ற கூட்டம்!

போ ரா! சமா தா னமா! என்று தர்மிஸ்ட சாமியார் கேட்டார். துட்ட கைமுனு இறந்து விடவில்லை சீடர் ஒருவர் திருவாய் மலர்ந்தார். இவை எல்லா வற்றுக்கும் மேலாக பர மார்த்த குருவுக்கு நிகராக புதிய வரலாறு புகட்டினர் ஒருவர். ஆமாம்; வடக்கில் தமழ் இராச்சியம் இருந்த தில்லை இருந்தால் அவ் இராச் சியத்தின் நாணயம் ஒன்றைக் காட்ட முடியுமா எனச் சவால் விடுகிறேன்'' என்ருர் அவர்.

நாணயத்தைக் காட்டட் டுமாம்! நாணயம் இல்லாத வர்கள்' தானே கேட்பார் கள். காலத்திற்குக் காலம் தமிழனை ஏமாற்றி நாணயம் இளந்தவர்கள் அல்லவா?

தமிழ் இராச்சியம் இருந்த தில்லை என்ருல் எல்லாளன் யார்? துட்ட கைமுனுவின் சரித்திரம் எப்படி வந்தது? தர்மிஷ்டசாமியார் ஜே.ஆர் இடம் எல்லாளனைப் பற்றி ஒரு பயிற்ச்சி வகுப்பு எடுக்க வேண்டும்.

சவால் விட்ட அமைச் சரே! விவசாய அமைச்சரே! தமிழ் இராச்சியம் இருந்தா லும் இலங்கைத்தீவு முழுவ தும் ஒரே நாணயத்தை ஏன் பாவித்திருக்க முடியாது? அல்லது தமிழ் நாட்டின் சேர, சோழ, பாண்டிய, பல் லவ இராச்சியங்களின் நாண யங்களைப் பாவித்திருக்கமுடி யாதா? பண்ட மாற்று நடை பெற்றதே! விவாதத்திற்கா கத் தனி நாணயம் இல்லை என நாம் நினைத்துக்கொண்டு மேற்படி கேள்விகளை எழுப் பினுலும்—

யாழ்ப்பாணத்தில் இருந்த காசுகளை தென்னிலங்கைக் குத் தந்திரமாக எடுத்துச் செல்லப்பட்டது உண்மை.

தமிழாராயச்சி மகாநாட் டின் போது காட்சிக்கு வைக் கப்பட்ட யாழ்ப்பாணத்து பண்டைய நாணயங்கள் அன்றைய அரசாங்க அதிப ரால் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டதை மறுக்க முடியுமா?

ஊனை உருக்கி உழைப் பாக்கி வெண்காயத்தையும், மிளகாயையும் செய்கின்ற விவசாயி நட்டம் அடையட் டும் என ஏன் நினைத்தாய்! இறக்குமதி செய் என வர்த் தக அமைச்சருக்கு ஏன் சிபா ரிசு செய்தாய்!

உரத்தின் விலை, கிருமி நாசினியின் விலை, இயந்திர

இப்போது மிளகாய் விலை இருத்தல் 6ரூபா,

அன்று மிளகாய்விதையின் விலைஇருத்தல்ஒன்று 1ரூபாய்

இன்று மிளகாய்விதையின் விலை இருத்தல் ஒன்று 40 ரூபாய்

அன்று ஒரு அந்தர் உரத் தின் விலை 22ரூபாய்

இன்று ஒரு அந்தர் உரத் தின் விலை 96 ரூபாய்

வாத விலை நிர்ணயிக்கப் படாதது ஏன்?

அதுமட்டுமா திட்டமிட்ட முறையில் முளை திறனற்ற விதை வகைகளை அனுப்பி வைத்து விவசாயிகளைஏமாற் றுவது ஏன்?

பம்பாய் வெண்காயம் வரண்ட பிரதேசத்தில் உற் பத்தி செய்வது சாத்தியமா னது. 1978ல் முளை திறனற்ற விதையை அனுப்பி விவசா யியை ஏமாற்றியது ஏன்?

## வெண்காயம், மிளகாய் இறக்குமதி

## வரவேற்கும் ம(ா)க்களிற்கு என்ன மதி?

## வரலாற்றைத்தான் திரித்தாய்?

## வயிற்றில் ஏன் அடித்தாய்?

உதிரிப்பாகங்களின் விலை இவை எல்லாம் வான மண் டலத்திலே மிதக்கின்றன.

1965—1966ல் 16அவுன்ஸ் மருந்து ஒன்றின் விலை 3ரூபா

அப்போது மிளகாய் உத் தர வாத விலை இருத்தல் 3ரூபா

1978ல் 16 அவுன்ஸ் ஒன் றின் விலை 40 ரூபா,

அன்று ஒரு அந்தர் விதை உருழைக்கிழங்கின் விலை 55 ரூபாய், 1 ருத்தல் அன்றைய விலை (40-ரூபா 75 சதம்)

இன்று ஒரு அந்தர் விதை உருளைக் கிழங்கின் விலை 325 ரூபாய்

1 இருத்தல் உருளைக் கிழங்கு கமக்காரன் விற்பது ரூ 1- சதம் 20- ரூ 1- சதம்50

இந் நிலையில்அமைச்சருக்கு வர வேற்பு ஒரு கேடா!

மாற்றுப் பயிர் சோயா அவரை என்று சொன்னுல் போதுமா!

சோயா அவரை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் விளை யக் கூடியது. அதற்கு உத்தர

பீற்றூட்விதைவிலை இருத் தல் ஒன்று 62 ரூபாய், ஏக்க ருக்கு ஆறு— எட்டு இருத் தல் விதை தேவைப்படுகி றது. ஆனுல் அனுப்பப்பட்ட விதை முளைக்கவில்லை, வட பகுதி விவசாயிகளும், ப.நோ.கூ. சங்கங்களும் நட் டம் அடைகின்றன.

சந்தக்கா மிளகாய் விதை இருத்தல் ஒன்று 35 ரூபாய், ஏக்கருக்கு எட்டு இருத்தல் தேவைப்படுகின்றது. ஆனுல் அனுப்பப்பட்ட விதை முளை திறனற்றது.

இந்த அவல நிலை ஏன்?

தமிழ்ப் பகுதி என்பதினுல் தானே இந்த அக்கறையீ னம்.

—5-ம் பக்கம் பார்க்க

## மக்கள் தலைவர் அமிர்

## அமைப்புக்குத் தலைவர் சிவா!!

"தமிழரசுக்கட்சி தந்தை செல்வாவின் தலைமையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஒரு புதிய பாதையைக் கடைப் பிடித்து வந்திருக்கிறது. அதாவது மக்களின் தலைவ ராக தந்தை செல்வா நிரந் தரமாக விளங்கிய அதே சமயம், அமைப்பின் தலைவ ராக பலர் கடந்தகாலத்தில் மாறிமாறித் தெரிவுசெய் யப்பட்டிருக்கிருர்கள். அதே முன் மாதிரியைப் பின்பற்றி மக்களின் தலைவராக விளங் கும் அமிர் அவர்கள் செய லதிபராக இருக்க, அமைப் பின் தலைவராக சிவா அவர் களை தெரிவு செய்து இருக்கி ருேம். கூட்டணிக்கு இது ஒர் புதுமையான நல்ல ஆரம் பமாகும்,"

—இவ்வாறு சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத் தினம் அவர்கள் தேர்தல் முடிந்த பின் தலைவரையும், செயலதிபரையும் வாழ்த் திப் பேசுகையில் கூறினர்.

### சிவா நன்றி

தம்மைத் தலைவராக தெரிவு செய்ததற்கு நன்றி தெரிவித்து நல்லூர் சிவா பேசுகையில், செயலதிபரின் துணையுடன் தம்மீது சுமத் தப்பட்டுள்ள பொறுப்பை நிச்சயம் விசுவாசமாக நிறைவேற்றுவேன்' என்ருர்.

## "தங்கத்துரையை விளக்க மறியலில் வைத்திருப்பது நீதிக்குமாருனது!"

### உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!

"முன்னுள் மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரையை காவல் துறையினர் கைது செய்து விளககமறியலில் வைத்து பார தூரமான குற்றச்சாட்டுக்களை சோடிக்கும் முயற்சி உண்மை கும் நீதிக்கும் அப்பாற்பட்டது.''

மேற்கண்டவாறு உயர் நீதிமன்றத்தில் திரு. தங்கத் துரையை பிணையில் விடும்படி உத்தரவிடுமாறு கோரி தாக் கல் செய்யப்பட்டுள்ள மனு வில் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவை உயர்நீதி மன்றத் தில் சட்டத்தரணி திரு. சிவாராஜரத்தினம் தாக்கல் செய்துள்ளார்

இந்த மனு விசாரணைக்கு உயர் நீதிமன்றத்துக்கு முன் வந்தபோது மனுதார் சார் பில் சிரேட்ட சட்டத்தரணி திரு. வி. எஸ். ஏ. புள்ளநாய கம் ஆஜராகி மனுதாருக்கு சார்பாக சட்டவாதம் நிகழ்த்தினர்.

ஒருவார காலத்துக்குள் சட்டமா அதிபரையும், மூதூர் காவல் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம். பி. திஸ்ஸேராவையும் நீதிமன் றத்துக்கு முன்னுல் ஆஜ ராகுமாறு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் திரு. மல்கம் பெரேரா, திரு. குணசேகரா ஆகியோர் நோட்டீஸ் உத் தரவு பிறப்பித்துள்ளனர்.

திரு. புள்ளநாயகத்துடன், திருமதி சாந்தி ஞானகரனும் மனுதார் சார்பில் ஆஜராகி யிருந்தார்.

திரு. தங்கத்துரை 24-4-78 முதல் கடந்த மூன்று மாதங் [illegible] பது தெரிந்ததே.

—7-ம் பக்கத் தொடர்

அதாவது "பஃறுளி ஆற் றுடன் பன்மலையடுக்கத்து குமரிக்கோடுங்கொடுங்கடல் கொள்ள"— கொடுமை யான கடல் என்று சொல் கிருர்—இளங்கோவடிகள். ஐயோ! இவ்வளவு பெரிய தமிழகமாக இருந்ததே, இந்தத் தமிழகத்தை இந் தக் கொடுமையான கடல் எடுத்து வாயில் போட்டுக் கொண்டதே என்கின்ற ஒரு ஆற்ருமைதோன்ற "கொடுங் கடல் கொள்ள வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டதென்திசைஆண்ட தென்னவன் வாழி" என்று சொல்கிருர், அவனுடைய ஆற்ருமை தோன்ற அவன் தான் இழந்துபோன பகுதி களை மீண்டும் தன்னேடு இணைத்துக் கொள்வதற்காக வடதிசை சென்று கங்கை யையும், இமயத்தையும் கைக்கொள்கிருன் என்றுஇந் தப் பாட்டுச் சொல்கிறது.

இந்தப் பாட்டை எதற் காக நான் உங்களிடத்திலே சொல்கிறேன் என்று சொன் னுல் இந்த இலங்கை என் பது ஏதோ தமிழகத்திற்கு அயலான நிலம் என்றுநினைத் துக்கொள்ளக்கூடாது, இப் போது நம்மிற் சிலர் தமிழர் கள் ஏதோ தமிழகப்பகுதி யிலிருந்து, அங்கிருந்து வாழ முடியாமல் இங்கு வந்து சேர்ந்தது போலவும், இங்கு நாம் இது வந்தேறிய நிலம் போலவும், இது ஒரு சேய் நிலம் போலவும், அந்தத் தமிழகம் தான் நமக்குத் தாய் நிலம் போலவும் நினைத்துப் பேசிக்கொண்டு வருகிருர்கள். இது வரலா ற்றை மறைப்பதான ஒரு செய்தியாகும்.

எனவேதான் தமிழர்கள், இங்கிருக்கும் தமிழர்கள், அங்கிருந்து வந்தவர்கள்— ஏதோ என்னைப்போல் ஒரு சிலர் வந்து இங்கு இருக்க லாம். சில காலத்துக்குள் மீண்டும் அங்கு போய்விட லாம். ஆனுல் நிலையாக இந் தத் தமிழினம் இந்த நிலத் திலே முழுவதும் உடமைப் படுத்தி ஆண்டுகொண்டிரு ந்த காலம் ஒன்றுண்டு, அந்த நிலையிலே வரலாறு நமக்கு மறைந்துபோய், புதிய புதிய உணர்வுகள் நம்மிடையே தோன்றிப் பல வகையான பிரிவு நிலைகளை ஏற்படுத்தி. நமக்கு இத்தகைய பல வீழ்ச்சிகளை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறது, என்று சொன்னுல் உண்மையாக நாம் வருந்துவதுக்குரியவர் கள்,

—வளரும்

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● புலவரேறு பெருஞ்சித்திரனர் பேருரை:

# தமிழரின் தொன்மைத் தாயகம் இலங்கையே! குமரிக்கண்டத்தின் ஓர் பகுதியே ஈழம்!

## ஈழத்தமிழர் தமிழகத்திலிருந்து வந்தேறியோர் அல்லர்

(சென்ற இதழ் தொடர்)

"காப்பி என்று சொன்ஞல் என்ன பொருள்? என்று நீங்கள் தெரிந்திருக்கிறீர்களா? என்று கேட்டால் நம்மிற் பலருக்குத் தெரியாது. ஏதோ மற்றவர்கள் காப்பி என்றுசொன்ஞர்கள்; நாமும் சொல்கிரும். அதைச் சொன்னவுடன் உணவுவிடுதியிலே கொண்டு வந்து கொடுக்கிருன், அதைக்குடிக்கிரும் என்று நினைக்கிரும். என்ன சொல்ல வேண்டுமென்பதை நாம் தெரிந்து சொல்லவேண்டும். அப்படிச் சொல்கின்ற பொழுது ஒரு உணர்வு நம் உள்ளத்திலே தோன்றும்; அந்த உணர்வு நமக்குத் தேவை. அந்த உணர்வுதான் உங்களையும், என்னையும் பிணித்துக் கட்டுகிற உணர்வு. எனவேதான் நான் தமிழ் மொழியிற் பேசினல் நீங்கள் எம்மவர் என்று என்னையும், நீங்கள் என்னவர் என்று நான் உங்களையும் கருத வேண்டியிருக்கிறது. வேறு மொழியிலே பேசினல் இது யாரோ என்ற ஒரு நினைவு நமக்குத் தோன்றும். எனவேதான் ஒவ்வொரு இனத்துக்கும் தாய் மொழி இன்றியமையாதது. அந்தத் தாய் மொழியின் அடிப்படையில் தான் நாம் ஒருவரோடு ஒருவர் உறவாடிக் கொள்ள முடியும். அந்தத் தாய்மொழி சிதைகிற போது, இனம் சிதைகிறது. அந்த இனத்தினுடைய சிதைவு தாய் மொழியின் அடிப்படையிலே அமைந்தது. ஆகையினலே தான் அந்தச் சிதைவை நிலை நிறுத்துவதற்கு, சிதைவு ஏற்படாமல் கட்டிக் காப்பதற்கு மொழியை நாம் சரிசெய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் சொல்லுவேன்; உங்களுக்கு எந்த அளவு தாய் மொழியுணர்ச்சி இருக்கிறதோ, அதே உணர்வு தான் என்னை உங்களிடையே இங்கே கொண்டு வந்து உறவாட வைக்கிறது. எனவே ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் தெரிந்து வழங்குவது தான், அடிப்படையிலே நமக்குத் தேவையான ஒரு உணர்வு.

Coffee என்பது கிரேக்கச் சொல். அந்தச் சொல்லுக்கு என்ன பொருளென்று சொன்ஞல், ஒரு மாட்டினுடைய குளம்புஎன்றுபெயர்: அதாவது காப்பி சீட்ஸ் (coffee seeds) என்று சொன்ஞல் குளம்புபோல் இருக்கிற கொட்டை என்று பெயர் வைத்திருக்கிருன். அதாவது மாட்டுக்குளம்பைப் பார்த்தீர்களாஞல் இரண்டாகப் பிளந்திருக்கும். அப்படிப் பிளந்திருக்கிற அந்தக் கொட்டையைப் பார்த்து இது குளம்புபோல் இருக்கிற கொட்டை என்று சொல்வதற்காக 'காப்பி சீட்ஸ்' என்று சொன்ஞன். அது கிரேக்கச் சொல். ஆங்கிலச் சொல்லன்று; எனவே நாங்கள் பார்த்தோம். ஓ! குளம்பு போல் இருக்கிற கொட்டை; 'குளம்புக் கொட்டை' எனவே அந்தக் குளம்புக் கொட்டையிலிருந்து வடிக்கின்ற நீர் 'குளம்பி' என்று பெயர் வைத்தோம். ல்இஇ ஏதாவது நபர் இருப்பது எங்களுக்குத் தெரியவில்லை.

இதுபோல் பல பெயர்களை நாங்கள் ஒரு புதிய முறையோடு கண்டு பிடித்து இருக்கிரும். தொலைவிலிருந்து கேட்கின்ற, பேசுகின்ற ஒரு கருவியைத் தொலைபேசி; தொலைவிலிருந்து வருகின்ற செய்தியைப் படமாகக் காட்டுகின்ற ஒரு கருவியைத் தொலைக் காட்சிப் பெட்டி என்று எல்லாம் சொல்கிரும். இது இயல்பாக நம்மை ஒருவரோடு ஒருவர் இணைக்கின்ற ஒரு சொல்லாக, முயற்சியாக நாங்கள் நினைக்கின்றும். ஆனுல் சில சொற்களை அப்படி வலிந்து நாம் செய்ய வேண்டுமா என்ற கேள்வி. அப்படிச் செய்வதிலே ஏதாவது பிழையிருக்கிறதா? என்று பார்க்க வேண்டும்; பிழையில்லாத போது நாம் எதையும் அப்படிச் செய்து கொள்ளலாம்.

நம் பிள்ளைகளுக்கு அறிவியல் உணர்ச்சி வரவேண்டும் என்று சொன்ஞல் தாய் மொழியில் அவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும். ஆங்கிலத்திலேயே நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, அவர்களுக்கு அந்தத் தாய் மொழியிலே கற்பிக்கின்ற அளவை விட மிகுதியாகக் கற்பித்து விட முடியாது. இது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை. ஜப்பானிலே அவர்கள் மொழியிலே தான் சொல்லித் தருகிருர்கள் அறிவியலைக் கூட; ருஷ்யாவில் அவர்களுடைய மொழியிலேதான் சொல்கிருர்கள். ஆங்கிலத்தில் சொல்வதில்லை. நீங்கள் எல்லா நாடுகளிலும் ஆங்கிலத்திலே சொல்கிருர்கள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது.

சீனவிலே பைபிளை ஆங்கிலத்திலே எடுத்துச் சீன அதிபருக்குக் கொடுத்தார்கள். என்னுடைய சீன மொழியிலே மொழி பெயர்த்துத் தந்தால் தவிர நான் இதைப் படிக்க மாட்டேன் என்று சொல்லி விட்டார். நீங்கள் மற்ற இன மக்களைப் பார்க்கிற போது நாம் எவ்வளவு மொழி உணர்ச்சியிலே தாழ்வாக இருக்கிரும் என்பது உங்களுக்கு விளங்கும். இதஞல் தான் தமிழ்மொழி ஒரு தனி மொழி. அது தனித் தமிழ் என்று சொன்ஞலும், தூய தமிழ் என்று சொன்ஞலும் ஒன்று தான். அதிலே வேறுபாடு இல்லை. ஆஞல் நாம் வழங்குகின்ற மொழி கலவை மொழியாக இருக்கிறது அந்த மொழியை நாங்கள் பிரித்துக் காட்டுவதற்காகத் தமிழ். தனித்தமிழ், தூய—தமிழ் என்று சொல்கிருமே தவிர வேறு ஏதோ புதுத் தமிழை நாங்கள் சொல்லவில்லை; எனவே தலைவர் அவர்கள் சொன்னவுடனேயே என்னை நீங்கள் உங்களிலே வேறுபாடான ஒரு உணர்வோடு பார்க்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நான் எடுத்துக் கொண்ட தலைப்புக்கு ஒரு சில கருத்துக்களைப் பொருத்திக் காட்ட விரும்புகின்றேன். "தமிழ் இன வரலாற்று வீழ்ச்சி" என்பது நான் இங்குபேச விரும்புகிற அந்தக் கருத்தினுடைய தலைப்பாகத் தெரிவித்திருந்தேன். பெரியோர்களே! நீங்கள் இந்தத் தமிழ் ஈழத்திலே வாழ்கின்ற ஒரு நிலையிலே உங்களுக்கெல்லாம் ஒரு வகையான உணர்ச்சி இருக்கலாம். அதாவது நான் நாளை போய்ச் சேருகின்ற அந்தத் தமிழ் நிலம் தாய்த் தமிழகம் என்றே, இங்கு இருக்கின்ற, நீங்கள் வாழ்கின்ற இந்தத் தமிழ்ஈழமும், இதைச் சேர்ந்து இருக்கின்ற இந்த இலங்கைப் பகுதியும் சேய்த் தமிழகம் என்றே நீங்கள் இதுவரை நினைத்திருந்தீர்கள். இப்போதும் கூட அந்தத் தமிழகத்தில் இருக்கின்ற பலர் அவ்வாறுதான் கருதுகிருர்கள் என்று நினைக்கிறேன். ஆனுல் உண்மையிலேயே நீங்கள் ஒரு அடிப்படையான வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.



தமிழ்ஈழம் என்று அழைக்கப்படுகின்ற இந்த வட பகுதியும், கிழக்குப் பகுதியுஞ் சேர்ந்த இந்த நிலம் மட்டும் ஒரு தமிழ்ப் பகுதி என்று நீங்கள் கருதிக் கொள்ளக் கூடாது. நான் எந்த வகையான அரசியல் அடிப்படையிலும், அல்லது வேறுயாரையும் நோகச் செய்கின்ற அடிப்படையிலும் இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. வரலாற்று ஆசிரியர்களுக்கு, உண்மையைச் சொல்வது தான் அவர்களுடைய கடமை, எனவே இந்த இலங்கை என்று சொல்லப் பெறுகின்ற இந்த நிலம் ஏறத்தாழ கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன்பு குமரிக்கண்டம் என்று அழைக்கப் பெற்ற ஒரு பெரும் பகுதி நிலமாக இருந்தது. இந்த உண்மையை உங்களிலே பலர் அறிந்திருப்பீர்கள் அதாவது இந்த இலங்கை என்கின்ற இந்த நிலப் பகுதியும், வேறு சில இந்தக் கடலிலே— இந்துமா கடல் என்று சொல்லப்படுகின்ற இந்தக் கடலிலே வேறு சில நிலப்பகுதியும் சேர்ந்து— குமரிக்கண்டம் என்று ஒரு கண்டம் இருந்தது.

நான் சொல்வது லெமூரியாக் கண்டத்தையன்று. லெமூரியாக்கண்டம் இருப்பதற்கு முன்னால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலி [illegible] யாக்கண்டம் [illegible] அதற்குப் பெயர் வந்தது என்று சொன்ஞல், அந்தக் கண்டத்திலேதான் "லெமூ" என்கின்ற ஒரு குரங்கினம் வாழ்ந்திருந்தது. அந்தக் குரங்கினம்தான் பின்பு படிப்படியாக மாந்த நிலையிலே வளர்ச்சி பெற்றது என்று உயிர் நூல் அறிஞர்கள் சொல்கிருர்கள். அந்த நிலத்துக்குக் "காண்டுவாஞ சிஸ்ரம்" என்றும் அவர்கள் நிலநூல் முறைப்படி ஒரு பெயரைக் கொடுத்து அழைக்கிருர்கள். எனவே நான் சொல்லுகின்ற அந்தக் குமரிக்கண்டம் அந்தக் காண்டுவாஞவோ, அல்லது லெமூரியாவோ அன்று; அந்த லெமூரியாவும், காண்டுவாஞவும் இருந்தபோது மாந்தன் தோன்றவில்லை. உயிரினங்கள் மட்டுந்தான் இருந்தன. அந்தக் கண்டம் படிப்படியாக அழிந்துபோய், அதாவது கடலுக்குள்ளே மூழ்கிப்போய்விட்டது. அதற்குப் பின்ஞல் எஞ்சியிருக்கின்ற பகுதி குமரிக்கண்டம் என்று நம்முடைய வரலாற்றுக்கு எட்டிய அளவிலே அந்தப் பெயர் வழங்கியிருந்தது. இதற்குச் சிலப்பதிகாரத்திலே ஒரு குறிப்பு இருப்பதை உங்களிலேசிலர் உணரலாம். அதாவது!

"பஃறுளி யாற்றுடன் பன்மலை
யடுக்கத்து
குமரிக்கோடுங் கொடுங்கடல்
கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங்
கொண்டு
தென்திசை யாண்ட
தென்னவன் வாழி"

என்று பாண்டியனை வாழ்த்துகின்ற ஒரு வாழ்த்துப் பாடல் சிலப்பதிகாரத்திலே வருகிறது. அதாவது பஃறுளி ஆறு—பன்மலை அடுக்கம்—குமரிக்கோடு என்கின்ற மூன்று பெயர் குறிக்கப் பெறுகிறது. இந்தப் பஃறுளி ஆறு என்கிற ஆறு இப்பொழுது வேறு எங்குமில்லை, அது இந்தக் குமரிக் கண்டத்திலே இருந்ததாக அதிலே செய்தி வருகிறது. பஃறுளி என்று சொன்ஞல் பலதுளி; பல்துளி—பஃறுளி என்று மருவும், எனவே அந்த ஆறு மிகப்பெரிய ஆருக இருந்திருக்க வேண்டும். அந்தஆற்றங் கரையிலேதான் பாண்டியனுடைய தலைநகரான தென்மதுரை இருந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிருர்கள், அந்த ஆற்றையும், அந்த ஆறு எங்கிருந்து தோன்றி வந்ததோ அந்தப் பஃறுளி ஆறு தோன்றிய அந்த மலை—பன்மலை—பெரிய மலையடுக்கம் என்று சொல்லப்படுகிறது. மலையடுக்கம் என்று சொன்ஞல், அடுக்கடுக்காக, அடுக்கடுக்காகத் தொடர்ந்த மலைத் தொடர். அது ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து ஆஸ்திரேலியாக் கண்டம்வரை நீண்டு இருக்கிறதாக இப்பொழுது கடல் ஆராய்ச்சியாளர்கள் அதை அறிந்து சொல்கிருர்கள். இந்தஆராய்ச்சியெல்லாம் இன்னும் சிறிது காலத்திலே தமிழனுடைய வரலாறு அது தான், பிறந்தகம் அதுதான் என்று மிகவும் அழுத்தமாகச் சொல்லப்படுகின்ற நிலை ஒன்று வரும். அப்போது தான் இந்த உண்மை நமக்கு விளங்கும்.

இந்த நிலம் கடலால் மூழ்கடிக்கப்பட்டபோது பாண்டியன் வடக்கே கொஞ்சம் வருகிருன். வடக்கே வந்த போதுங்கூட அந்தக் குமரி நிலம் முழுவதும் மூழ்கிவிடவில்லை, இந்த இலங்கையை விட இன்னும் கூடுதலான நிலம் இருந்தது. அப்போது அவன் கபாட புரத்தைத் தலை நகராக்கிக் கொண்டு ஆண்டான் என்று குறிப்பு எழுதுகின்றனர். அவன் "நிலந்தர புரவிற் பாண்டியன்" என்று சொல்லப்பெறுகின்ற, தொல்காப்பியத்திலே குறிக்கப்பெறுகின்ற ஒரு பாண்டிய அரசன்.

பாண்டியன் என்று சொன்ஞல் பழையவன் என்று பெயர். பண்டு என்ற சொலலடியாகப் பிறந்த சொல் அது. பண்டு என்ருல் பழமை, அந்தப் பழைய அரசஞகியவன் பாண்டியன். அந்தப் பாண்டியன்தான் உலகத்திலேயே பழமையான அரசஞகக் குறிக்கப்பெறுகிருன். அவஞேடு ஒத்த அரசர்கள் வாழ்ந்திருந்த அந்தக் காலம் மிகவும் வரலாற்றுக்கு முந்திய காலம். உலகத்திலே வேறு இனங்கள் சரியாகத் தோன்றி அரசமைக்காத காலம். அந்தக் காலத்திலே அவன் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, இரண்டாங்கழகத்தைநிறுவி ஆண்டுகொண்டிருந்தான்.

அதற்குப் பின்ஞல் மீண்டும் இரண்டாவது கடற்கோள் நிகழ்ந்தது; அதாவது இரண்டாவது முறையாக அந்த நிலத்தைக் கடல் மூடியது. அப்பொழுதுஅவன் மீண்டும் வடக்கே வந்தான். வடக்கே வருகிறபோதுதான் அவன் இப்பொழுது இருக்கிற மதுரையை அவன் பற்றி அந்த மதுரையைத் தலைநகராகக்கொண்டு, தான் இழந்துபோன அந்தப் பெரிய நிலப்பகுதிக்கு ஈடாக மீண்டும் வடக்கே சென்று கங்கையைக் கைப்பற்றுகிருன். கங்கையை எதற்காகக் கைப்பற்றுகிருன் என்று சொன்ஞல் அவனுடைய நாட்டிலேயிருந்த பஃறுளி ஆறு மிகப் பெரிய பேராறு. அந்த ஆற்றை இழந்த ஆற்ருமையினலே, அவனுக்கு மிகவும் துயரமான ஒரு நிலையிலே, வடக்கே படையெடுத்துச் சென்று அந்தக் கங்கையை அவன் வெற்றிகொள்கிருன், கங்கையை வெற்றிகொண்டவுடனே கூட அவனுடைய அந்த, அவன் நாட்டின்மேல் வைத்த பற்றுத் தீர்ந்த பாடில்லை, உடனே இமயத்தை வெற்றி கொள்கிருன். இந்தக் கங்கையையும், இமயத்தையும் வெற்றிகொண்ட பின்ஞல்தான் அவன் தான் இழந்துபோன அந்த ஆற்றினுடைய பகுதிக்காகவும், தான் இழந்துபோன அந்தக் குமரிக்கண்டத்தினுடைய ஒரு நிலப்பரப்புக்காகவும் அவன் மனம் ஆறுதலுறுகின்றது. என்று இந்தக் குறிப்புப்பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—1-ம் பக்கத் தொடர்

குடிபெயரவைத்தது; தமிழ் ஈழத்தை நோக்கி அடியெடுக்கத்தூண்டியது. இந்நிலையில் கலவர மேற்படும் என்றே, தெற்கேயுள்ள தமிழர்களுக்கு துன்பம் நேருமென்றே கருதி, நாம் மேலும் விடுதலைப் போராட்டத்தைப் பின்தள்ளமுடியாது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் வந்திருக்கும் மாவட்ட அபிவிருத்திசபை போன்ற சலுகைகள் நமது தூய்மையான விடுதலைக்கோரிக்கையின் முன் வெறும் தூசு, இவற்றை இயக்கம் ஏறெடுத்துப்பார்ப்பது கூடத் தேவையற்றது.

"தமிழ்மக்கள் நேரடியாக பங்குபற்றக்கூடிய முறையில் அஹிம்சை அடிப்படையில் பரவலான ஒத்துழையாமை சட்டமறுப்பு இயக்கங்களை திட்டமிட்டு நடத்துவதற்கு கோப்பாய்மாநாடு தீர்மானிக்கவேண்டும்."

தமிழ் மகளிர்பேரவை அமைப்புசெயலாளர் திருமதி மங்கை அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது;-

"கடந்த பொதுத்தேர்தலின்போது கூட்டணி பா.உக்கள் ஒவ்வொருவரும் வாக்குறுதிப்பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு தந்தை செல்வாவின் சமாதியில் சென்று சத்தியம் எடுத்தார்கள் அந்த வாக்குறுதிகளில் ஒன்று, முழுநேர ஊழியனுகமாறி இயக்கத்துக்கு சேவை செய்வேன் என்பது. இந்த வாக்குறுதியை எத்தனை பா.உக்கள் இன்று நிறைவேற்றுகிறார்கள்? எத்தனைபேர் முழுநேர ஊழியர்களாக தம்மை இயக்கத்துக்கு ஒப்படைத்திருக்கிறார்கள்! இதைக் கூட்டணி ப.உக்கள் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்த்து— தமது மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்க வேண்டும்:- தமிழ் இளைஞர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்து விடுதலைக்காகப் போராடும் போது, கூட்டணி பா. உக்கள் தங்கள் சொந்த உழைப்பைத் துறந்து, இயக்கத்துக்காக முழுநேரமாக உழைக்கமுன்வரக்கூடாதா? அப்படி வராவிடின், அது மக்களுக்கு நாம் செய்யும் துரோகமாகிவிடும்!" என்றார்.


## சுதந்திரன் சந்தா

ஓராண்டுச் சந்தா ரூ. 50.00
அரை ஆண்டு ,, ரூ. 25,00

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

"சுதந்திரன்"
15, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.



இப்போது விற்பனையாகிறது!

**பாராளுமன்றத்தில் பெரியவர்**

(தொடர்—1)

விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடம்:
சுதந்திரன் வெளியீட்டகம்.
194ஏ; பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.


# இராஜலிங்கத்துக்கு வரவேற்பு விழா

தமிழர் விடுதலைக்கூட்டணியின் நான்கு துணைத்தலைவர்களில் முதலாவது துணைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட உடுப்பிட்டி பா. உ. திரு. த. இராசலிங்கம் அவர்களுக்கு ஓர் வரவேற்புவிழா 23-7-78 ஞாயிறுமாலை 6மணிக்கு உடுப்பிட்டித் தொகுதி த. இ. பேரவை அமைப்பாளர் ச. செந்துராசா தலைமையில் துன்னாலை வடக்கு அல்லைப்பெற்றான் சிறீ சுப்பிரமணிய சுவாமி ஆலய முன்றலில் நடைபெறுகிறது.

விழாவில் அ. அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், சி. கதிரவேற்பிள்ளை, வெ. யோகேஸ்வரன், வி. தருமலிங்கம், வ, ந. நவரத்தினம், க; துரைரத்தினம், கோவை மகேசன், க. ஜெயக்கொடி, திருமதி அமிர்தலிங்கம், கனகமனோகரன் உட்பட பலர் பேசுவர்.


## மெழுகுவர்த்தி

அமரர் டாக்டர் நாகநாதனின் சரித்திரம்

சிலம்புச் செல்வர் ம.பொ.சி, மதிப்புரையுடன்

நூலாசிரியர்: கரிகாலன்

விலை: ரூபா 5-00



**செல்லமகால்** கொட்டாஞ்சேனை

கலைமகள் சங்கமிக்கும் திரையோவியம்

ரகுநாதன், தனரத்தினம், சந்திரகலா, ஜவாகர், டீன்குமார் நடித்த-

லிபர்ட்டி பிலிம்ஸ்

**தெய்வம் தந்த வீடு**

(சினிமாஸ்கோப்)

தயாரிப்பு: வி. கே. டி பொன்னுசாமி



3-வது வாரமாக

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

ஜெய்சங்கர், லஷ்மி, விஜயலலிதா
நாகேஷ், மனோகர், ஸ்ரீ வித்தியா,
சகஸ்ரநாமம், வீ. எஸ். ராகவன், ஸ்ரீகாந்
-நடித்த-

**நூற்றுக்கு நூறு**

—கதை—வசனம்—டைரக்ஷன்—
கே. பாலசந்தர்



**கிங்ஸ்லி** (கொழும்பு) 5-வது வாரம்

முத்துராமன், சுஜாதா —நடித்த,

**பெரும் புகழும்**



**விஜயா** (மட்டுநகர்)

சிவாஜி நடித்த—

**உத்தமன்**

— கலர் —



7-வது வாரம்

**கெப்பிட்டல் பிளாசா**

கமலஹாசன், ஆலம்—நடித்த
கே. பாலச்சந்தரின்

**மன்மத லீலை**

(கலர்)



**லிடோ** (யாழ்நகர்) கடைசி வாரம்

சிவகுமார், ஹிந்தி நடிகை அலகா,
ஸ்ரீகாந்த், மனோரமா நடித்த-

**மதனமாளிகை**

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் [illegible] பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜூலை 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்